VNR12Acc

விருதுநகர் மாவட்டம்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

வகுப்பு 12
கணக்குப்பதிவியல்

கால அளவு: 3.00 மணிநேரம்    மதிப்பெண்கள்: 90

பகுதி - I

20×1=20

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

1) F11 எனும் பயன்பாடு
அ) நிறுவனப் பண்பு கூறுகள்    ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்
இ) நிறுவன கட்டமைப்பு    ஈ) இவைகளில் எதுவும் இல்லை

2) Tallyல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடு(கள்)?
அ) (i) மட்டும்    ஆ) (ii) மட்டும்
இ) (i) மற்றும் (ii) இவை இரண்டும்    ஈ) (ii) மற்றும் (iii) இவை இரண்டும்

3) நிலையறிக்கை பொதுவாக வியாபாரத்தின் ........... கண்டறிய தயாரிக்கப்படுகிறது.
அ) இலாபம் அல்லது நட்டம்    ஆ) நிதிநிலை
இ) முதல்    ஈ) கணக்கீட்டு சரித்தன்மை

4) இறுதி முதல் + எடுப்புகள் – கூடுதல் முதல் = ........
அ) சரிகட்டப்பட்ட தொடக்க முதல்    ஆ) தொடக்க முதல்
இ) இலாபம் அல்லது நட்டம்    ஈ) சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்

5) ஓராண்டிற்குள் அல்லது ஒரு இயக்கச் சுழற்சியின் காலத்திற்குள் ரொக்கமாக மாற்றப்பட வேண்டிய சொத்துக்கள்
அ) புலனாகும் சொத்துக்கள்    ஆ) நிலைச்சொத்துக்கள்
இ) நடப்புச் சொத்துக்கள்    ஈ) புலனாகா சொத்துக்கள்

6) பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?
அ) நீர்மை விகிதம் - விகிதாச்சாரம்
ஆ) மொத்த இலாப விகிதம் - சதவீதம்
இ) நிலைச் சொத்துக்கள் சுழற்சி விகிதம் - சதவீதம்
ஈ) புற - அகப் பொறுப்புக்கள் விகிதம் - விகிதாச்சாரம்

7) நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா இன்னும் பெறாதது
அ) ஒரு சொத்து    ஆ) ஒரு பொறுப்பு
இ) ஒரு செலவு    ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

8) வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்
அ) நிலை முதல் முறை    ஆ) சராசரி இலாப முறை
இ) உயர் இலாப முறை    ஈ) மூலதனமாக்கல் முறை

9) ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாபவிகிதமாக கருதப்படுவது
அ) சராசரி இலாபம்    ஆ) சாதாரண இலாப விகிதம்
இ) எதிர்நோக்கும் இலாப விகிதம்    ஈ) இவைகளில் ஏதுமில்லை

10) பின்வருவனவற்றுள் வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்
அ) தணிக்கைக் கட்டணம்    ஆ) மின் கட்டணம்
இ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்    ஈ) தொலைபேசிக் கட்டணம்

11) பின்வருவனவற்றில் எது இலாப நட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
அ) அலுவலகச் செலவுகள்    ஆ) பணியாளர் ஊதியம்
இ) கூட்டாளியின் ஊதியம்    ஈ) வங்கி கடன்மீதான வட்டி

12) பட்டியல் I மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| கூட்டாளியின் ஊதியம் | பிரிவு 13 (இ) |
| இலாப பகிர்வு விகிதம் | பிரிவு 13 (ஈ) |
| முதல் மீது வட்டி | பிரிவு 13 (ஆ) |
| கடன் மீதான வட்டி | பிரிவு 13 (அ) |

குறியீடுகள்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 4 | 3 | 1 | 2 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 2 | 1 | 4 | 3 |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



13) நிதிநிலை அறிக்கைகள் வெளிகாட்டாதது
அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்த கால தகவல்கள்
இ) குறுகிய கால தகவல்கள் ஈ) நீண்ட கால தகவல்கள்

14) ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ரூ.80,000. இரண்டாம் ஆண்டில் செலவுகள் ரூ.88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?
அ) 10% ஆ) 110% இ) 90% ஈ) 11%

15) ஒறுப்பிழப்பு செய்யும் போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு
இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை

16) ரூ.8 செலுத்தப்பட்ட, ரூ.10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை
அ) பங்கொன்று ரூ.10 ஆ) பங்கொன்று ரூ.8
இ) பங்கொன்று ரூ.5 ஈ) பங்கொன்று ரூ.2

17) பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்
அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

18) மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாரா க/கு

19) விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத் தொகை உடனடியாக செலுத்தாத போது, அது மாற்றப்படும் கணக்கு
அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

20) கூட்டாளி விலகலின் போது பொதுகாப்பு மாற்றப்படுவது
அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
ஆ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு
இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
ஈ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

## பகுதி - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 30 கட்டாய வினா) 7×2=14**

21) தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

22) இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்

23) 2018 ஆம் ஆண்டில் ரவி என்ற கூட்டாளி எடுத்த எடுப்புக்கள் ரூ.30,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என விதிக்கப்பட்டது. 2018, டிசம்பர் 31 அன்றைய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்

24) பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்

| | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| 2019, மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 7,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | ? |

25) தியாக விகிதம் என்றால் என்ன?

26) தீனா, சூர்யா மற்றும் ஜானகி என்ற கூட்டாளிகள் 5 : 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.3.2018 அன்று தீனா கூட்டாண்மையை விட்டு விலகினார். அவருடைய விலகலின் போது நிறுவனத்தின் கணக்கேடுகள் ரூ.50,000 காப்பு நிதியினைக் காட்டியது. காப்பு நிதியினை மாற்றுவதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவினை தரவும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

27) பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?

28) ராதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016-2017 ரூ. |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,50,000 |
| இதர வருமானம் | 67,500 |
| செலவுகள் | 1,35,000 |

29) கீதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து நிலைச் சொத்துக்கள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.

i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.55,00,000

ii) அவ்வாண்டில் இறுதியில் நிலைச்சொத்துக்கள் ரூ.5,00,000

30) தன்னுருவாக்க நற்பெயர் என்றால் என்ன?

## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 40 கட்டாய வினா) 7×3=21**

31) நிலை அறிக்கை மற்றும் இருப்பு நிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும் (ஏதேனும் 3)

32) Tally ERP.9ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.

33) இலாப நோக்கமற்ற அமைப்பில் கீழ்க்காணும் செலவுகள், முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

i) மதிப்பூதியம்

ii) விளையாட்டு உபகரணம் வாங்குதல்

iii) நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குதல்

34) பின்வரும் விவரங்களைக் கொண்டு குறிஞ்சி வரையறு நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்

| | ரூ.ஆயிரங்களில் | | |
|---|---|---|---|
| விவரம் | 2015-2016 | 2016-2017 | 2017-2018 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 120 | 132 | 156 |
| இதர வருமானம் | 50 | 38 | 65 |
| செலவுகள் | 100 | 135 | 123 |

35) பாரடைஸ் வரையறு நிறுமம், ரூ.4,40,000 மதிப்புள்ள சொத்துக்களை சுகுணா அறைகலன் வரையறு நிறுவனத்திடமிருந்து வாங்கியது. இதற்குப் பதிலாக ரூ.10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை செலுத்தி நிறைவு செய்தனர். பின்வரும் சூழலுக்கான பதிவுகளைத் தரவும்

அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

ஆ) பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டால்

36) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்

37) பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்

அ) சராசரி இலாபம் ரூ.20,000

ஆ) சாதாரண இலாப விகிதம் 10%

இ) பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.1,50,000

38) கவின், மதன் மற்றும் ரஞ்சித் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 4 ; 3 : 3 விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று கவின் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். விலகலுக்குப் பின் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்த பிறகு அவருடைய முதல் கணக்கு ரூ.1,50,000 வரவிருப்பைக் காட்டியது. பின்வரும் நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

i) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

ii) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



iii) ரூ.1,00,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது. மீதத்தொகை இன்னும் செலுத்தப்பட உள்ளது.

39) விமல் மற்றும் ஆதி என்ற இரு கூட்டாளிகள் 2 : 1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜெயம் எனபவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்ந்தனர். புதிய இலாப பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்

40) சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள் நீர்மைச் சொத்தாக கருதப்படுவதில்லை - காரணம் கூறவும்

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **7×5=35**

41) அ) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7 : 5 என்ற விகித்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| | | | கடனாளிகள் | 30,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | வங்கி | 19,000 |
| இலாப நட்ட க/கு | | 24,000 | | |
| | | 1,74,000 | | 1,74,000 |

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ரூ.30,000 முதலுடன் எதிர்கால இலாபப் பங்கில் 1/3 விகிகத்தில், பின்வரும் சரிகட்டலுடன் கூட்டாளியாகிறார்.

அ) சரக்கிருப்பின் மதிப்பு ரூ.5,000 குறைக்கப்பட வேண்டும்

ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.3,000 உருவாக்கப்பட வேண்டும்

இ) கட்டடம் ரூ.20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

**(அல்லது)**

ஆ) 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ரூ.1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 2019 மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

| விவரம் | ரூ. |
|---|---|
| வங்கி மேல் வரைப்பற்று | 50,000 |
| கடனாளிகள் | 1,80,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 |
| கணினி | 30,000 |
| இயந்திரம் | 3,00,000 |
| சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனீந்தோர் | 90,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 2,40,000 |
| கை ரொக்கம் | 60,000 |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ரூ.30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.40,000 அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

42) அ) நதியா வரையறு நிறுமம் ரூ.10 மதிப்பிலான ரூ.8 அழைக்கப்பட்ட 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. இதில் மயூரி பங்கு ஒன்றுக்கு ரூ.6 விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டிற்கான தொகையினைச் செலுத்தி இருந்தார். அவற்றில் 75 பங்குகள் புங்கு ஒன்றிற்கு ரூ.7 பெற்றுக் கொண்டு ரூ.8 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாக சௌந்தர்யா என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

**(அல்லது)**

ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) அ) துரை மற்றும் வேலன் 2018, ஏப்ரல் 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். துரை ரூ.25,000 மற்றும் வேலன் ரூ.30,000 முதலாக கொண்டு வந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.

அ) துரை மற்றும் வேலன் இலாப நட்டங்களை 2 : 3 என்ற விகிதத்தில் பகிர வேண்டும்

ஆ) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% தரப்பட வேண்டும்

இ) எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடபட வேண்டியது : துரை ரூ.300 மற்றும் வேலன் ரூ.450

ஈ) துரைக்கு ஊதியம் ஆண்டுக்கு ரூ.5000 வழங்கப்பட வேண்டும் மற்றும்

உ) வேலனுக்கு தரப்பட வேண்டிய கழிவு ரூ.2000

அவ்வாண்டில் வட்டி, ஊதியம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிகட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ.20,000. இலாப நட்டப் பகிர்வு கணக்கைத் தயாரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 10,000 |
| கை ரொக்கம் | 5,000 | எழுதுபொருளுக்காக செலுத்தியது | 7,000 |
| வாடகை பெற்றது | 10,000 | கணிப்பொறி வாங்கியது | 25,000 |
| முதலீடுகள் விற்றது | 8,000 | சம்பளம் | 20,000 |
| சந்தா பெற்றது | 54,000 | இறுதி இருப்பு கைரொக்கம் | 15,000 |
| | 77,000 | | 77,000 |

44) அ) பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தாயாரிக்கவும்.

| விவரம் | 2016-2017 | 2017-2018 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

**(அல்லது)**

ஆ) முகேஷ் நிறுமத்தின் பின்வரும் இலாப நட்ட அறிக்கையிலிருந்து

i) மொத்த இலாப விகிதம் ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்

**முகேஷ் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை**

| | விவரம் | தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| i) | விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| ii) | இதர வருமானம்: | |
| | முதலீடு மூலம் வருவாய் | 40,000 |
| iii) | மொத்த வருவாய் | 5,40,000 |
| iv) | செலவுகள்: | |
| | கொள்முதல் செய்த சரக்குகள் | 1,80,000 |
| | சரக்கிருப்பு மாற்றம் | 20,000 |
| | பணியாளர் நலனுக்கான செலவுகள் | 30,000 |
| | இதர செலவுகள் | 1,10,000 |
| | வரி ஒதுக்கு | 50,000 |
| | | 3,90,000 |
| v) | அவ்வாண்டிற்கான இலபாம் | 1,50,000 |

45) அ) நிலை முதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**(அல்லது)**

ஆ) சம்பத் நிறுமம் 25,000 நேர்மைப் பங்குகளை, பங்கு ஒன்று ரூ.10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ.3, ஒதுக்கீட்டின் போது ரூ.4, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.3 செலுத்தப்பட வேண்டும். பொது மக்களால் 24,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குநர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாகப் பெறப்பட்டன தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

46) அ) பின்வரும் விவரங்களிலிருந்து உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்

அ) நிறுவனத்தின் மொத்த சொத்துக்கள் ரூ.5,00,000

ஆ) நிறுவனத்தின் பொறுப்புக்கள் ரூ.2,00,000

இ) இவ்வகை தொழில்களின் சாதராண இலாப விகிதம் 12.5%

ஈ) நிறுவனத்தின் சராசரி இலாபம் ரூ.60,000

**(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2017-2018 ஆம் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ரூ. |
|---|---|
| 1.4.2017 அன்று பரிசு நிதி | 60,000 |
| 1.4.2017 அன்று பரிசு நிதிக்கான முதலீடு | 60,000 |
| பரிசு நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 6,000 |
| பரிசுகள் வழங்கியது | 8,000 |
| பரிசு நிதிக்காக நன்கொடை பெற்றது | 12,000 |

47) அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனீந்தோர் | 30,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது | 30,000 |
| கொள்முதல் திருப்பம் | 15,000 |
| ரொக்கக் கொள்முதல் | 2,25,000 |
| 31.3.2019 அன்று கடனீந்தோர் | 25,000 |
| 31.3.2019 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |

**(அல்லது)**

ஆ) வினோத், கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2 : 2 : 1 என்ற விகித்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்க்கண்ட சரிகட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்

i) நிலம் மற்றும் கட்டடத்தின் மதிப்பை ரூ.18,000 அதிகரிக்க வேண்டும்

ii) இயந்திரத்தின் மதிப்பை ரூ.15,000 குறைக்க வேண்டும்

iii) கொடுபட வேண்டியச் செலவுகளுக்கு ரூ.8,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

- - - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com